# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அநுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,098 — 1935 ம் ௵ தைமீ 4 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரம்.

*1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கலுவாஞ்சிக்குடியில் ஒரு அரசினர் பாடசாலை கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—*

*பிரதமபடத்து இல. A 183. குறிச்சி—பட்டிருப்பு.*

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ஈஸ்றர்சீற்றன் தோட்டம் | பனந்தோட்டம் .. | கொழும்பு ஈஸ்றர்சீற்றன் கொம்பனி | .. 1 0 17·6 |

*எடுத்துககொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.*

*மேற்குறித்த காணிக்கு உரிததுப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ௵ (ஜனவரி) தை மாசம் 29 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு பட்டிருப்புக் கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.*

*மட்டக்களப்புக் கச்சேரி,*
1934 ம் ௵ மார்கழிமீ 20 ௳.

*சீ. சிற்றம்பலம்,*
*உதவி அரசாட்சி ஏசண்டு, மட்டக்களப்பு.*

---

### சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்.

*இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது சட்டவையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: வதுளை நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் வதுளை டிஸ்திறிகடைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1935 ம் ஆண்டு மாசி மாதம் 11 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.*

இங்ஙனம்,

*பிஸ்கால் கந்தோர், ஊவா,*
1934 ம் ௵ மார்கழிமீ 21 ௳.

*ரீ. ஜே. மெண்டிஸ்,*
*ஊவா பிஸ்காலுக்காக.*

---


PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.

1——J. N. 42896—130 (12/34)

T 1